**நாமக்கல் மாவட்டம்,**
**கொரோனா நோய்த்தொற்று அறிகுறிகள் தென்படுபவர்களுக்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தனிமைப்படுத்தும் பிரிவுகள் அமைக்கப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கா.மெகராஜ்.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு.**

நாமக்கல் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய்த்தொற்று ஏற்படாமல் தடுக்க பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இருந்த போதிலும் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்ட நபர்கள் எண்ணிக்கை 33 ஆக உயர்ந்துள்ளது. நோய்த்தொற்று பரவாமல் தடுக்க காய்கறிகள் வீடுகளுக்கே நேரடியாக சென்று வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் நாமக்கல் நகரப்பகுதியில் 8 இடங்களில் காய்கறி சந்தைகள் ஏற்படுத்தப்பட்டு பொதுமக்கள் சமுதாய இடைவெளியை கடைபிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் வாரத்தில் அத்தியாவசிய பொருட்கள் வாங்க இரண்டு நாட்கள் மட்டுமே வீட்டை விட்டு வெளியே வர 3 வெவ்வேறு வண்ணங்களில் அடையாள அட்டைகள் மாவட்டம் முழுவதும் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட நபர்களின், குடும்பத்தினர் அவர்களுடைய உறவினர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு பரிசோதனைகள் செய்யப்பட்டு, நோய்த்தொற்று அறிகுறிகள் தென்பட்ட நபர்கள் மருத்துவர்களின் கண்காணிப்பில் அரசு மருத்துமனைகளில் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர். நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்ட நபர்கள் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. நோய்த்தொற்று கண்டறியப்பட்ட நபர்களின் வசிப்பிடங்களை சுற்றிலும் தடுப்புகள் அமைக்கப்பட்டு, சுகாதாரத்துறையினர் அப்பகுதியைச் சுற்றிலும் 5 கி.மீட்டர் அளவிற்கு வீடு, வீடாக சென்று யாருக்கேனும் சளி, காய்ச்சல் அறிகுறிகள் உள்ளனவா என்று ஆய்வு செய்து வருகின்றார்கள்.

நோய்த்தொற்று அறிகுறிகள் தென்படுபவர்களை தனிமைப்படுத்துவதற்காக நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அரசு பெண்கள் கல்லூரியில் தனிமைப்படுத்தும் வார்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதேபோன்று இராசிபுரம் வெற்றி விகாஸ் பள்ளியில் 100 நபர்கள் தங்கும் வகையில் தனிமைப்படுத்தும் வார்டுகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை இன்று (08.04.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கா.மெகராஜ்.இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார். மேலும் புதன்சந்தைபகுதியில் 30 படுக்கைகள் கொண்ட வினைத்தீர்த்தபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 24 படுக்கைகள் கொண்ட கொரோனா நோய்த்தொற்று அறிகுறிகள் காணப்படுபவர்களுக்கான தனிமைப்படுத்தும் வார்டுகள் அமைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது துணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.சோமசுந்தரம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு.பால்பிரின்ஸ்லி ராஜ்குமார், சிறப்பு மருத்துவர் மரு.கவின்குமார், நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர், வட்டாட்சியர் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.

**கொரோனா நோய்த்தொற்று சிகிச்சைக்காக மாற்று ஏற்பாடுகள்**

நாமக்கல் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டவர்களிடமிருந்து அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைபெறும் பிறநோயாளிகளுக்கும், பிரசவத்திற்கு அனுமதிக்கப்படும் கர்ப்பிணிபெண்கள், டயாலிசிஸ் சிகிச்சைபெறும் நோயாளிகள் உள்ளிட்ட அனைத்து நோயாளிகளுக்கும்,

கொரோனா வைரஸ் நோய்தொற்று பரவாமல் பாதுகாப்பான முறையில் சிகிச்சை அளிக்க மாவட்ட நிர்வாகத்தால் கீழ்கண்டவாறு மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் நாமக்கல் அரசுமருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருச்செங்கோடு அரசு மருத்துவமனை, இராசிபுரம் அரசுமருத்துவமனை ஆகியவை முழுவதுமாக கோவிட்-19 எனப்படும் கொரோனா வைரஸ் நோய் தொற்று அறிகுறிகளுடன் வரும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் மையங்களாக செயல்படும்.

நாமக்கல் பகுதியில் நாமக்கல் எம்.எம்.மருத்துவமனை, நாமக்கல் தங்கம் மருத்துவமனை ஆகிய தனியார் மருத்துவமனைகள் முழுவதுமாக கோவிட்-19 எனப்படும் கொரோனா வைரஸ் நோய் தொற்று அறிகுறிகளுடன் வரும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் மையமாக செயல்படும்.

நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மட்டும் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலம் சிகிச்சை தொடர்ந்து அளிக்கப்படும்.

நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தொற்றா நோய் சிகிச்சை (Non-Communicable Diseases-NCD), டயாலிசிஸ் சிகிச்சைபெறும் நோயாளிகள், நாமக்கல் - மோகனூர் சாலையில் செயல்பட்டு வரும் மகாராஜா மருத்துவமனையில் புறநோயாளிகளாகவும், உள் நோயாளிகளாகவும் அனுமதிக்கப்பட்டு, கட்டணமின்றி சிகிச்சை அளிக்கப்படும்.

நாமக்கல் அரவிந்த் மருத்துவமனையில் அவசர கால விபத்து சிகிச்சைகள் அளிக்கப்படும்.

**திருச்செங்கோடு பகுதி**

திருச்செங்கோடு எளையாம்பாளையம் விவேகானந்தா மருத்துவமனையானது 164 படுக்கைகளுடன் கோவிட்-19 எனப்படும் கொரோனா வைரஸ் நோய் தொற்று அறிகுறிகளுடன் வரும் நோயாளிகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கும் மையமாக செயல்படும்.

திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் மகப்பேறு, பேறுசார் சிகிச்சை, பச்சிளம் குழந்தைகள் அவசர சிகிச்சை மற்றும் பிற அவசர சிகிச்சைகளுக்கு வரும் நோயாளிகளை திருச்செங்கோடு சூர்யா மருத்துவமனை, திருச்செங்கோடு எஸ்.பி.எம்.மருத்துவமனை, திருச்செங்கோடு ஜெயா மருத்துவமனை ஆகிய தனியார் மருத்துவமனைகளில் அனுமதித்து கட்டணமின்றி சிகிச்சை அளிக்கப்படும்.

திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில், டயாலிசிஸ் சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகள், எளையாம்பாளையம் விவேகானந்தா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு நோயாளிகளுக்கு கட்டணமின்றி சிகிச்சை அளிக்கப்படும்.

**இராசிபுரம் பகுதி**

இராசிபுரம் அரசு மருத்துவமனைக்கு மகப்பேறு, பேறுசார் சிகிச்சை, பச்சிளம் குழந்தைகள் அவசர சிகிச்சை மற்றும் பிற அவசர சிகிச்சைகளுக்கு வரும் நோயாளிகளை பிள்ளாநல்லூர் அரசு ஆரம்ப சுகாதார மையத்தில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்படும்.

இராசிபுரம் அரசு மருத்துவமனையில், டயாலிசிஸ் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள், **இராசிபுரம் மாணிக்கம் மருத்துவமனையில்** அனுமதிக்கப்பட்டு, கட்டணமின்றி சிகிச்சை அளிக்கப்படும்.

திருச்செங்கோடு மற்றும் இராசிபுரம் அரசு மருத்துவமனைகளில், தொற்றா நோய் சிகிச்சைபெறும் (Non-Communicable Diseases-NCD) நோயாளிகளுக்கு அருகாமையில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் / நகர் நலமையங்களில் சிகிச்சை அளிக்கப்படும்.

**அவசர சேவை ஊர்திகள்**

பச்சிளம் குழந்தைகள் சேவை அவசர சேவை ஊர்திஆம்புலன்ஸ் தவிர நாமக்கல் மாவட்டத்தில் செயல்படும், 108 ஆம்புலன்ஸ் சேவைகள் முழுவதுமாக கொரோனா வைரஸ் நோய் தொற்று உள்ளவர்களை மருத்துவமனைகளுக்கு அழைத்துவரும் பணியை மட்டும் மேற்கொள்ளும். கர்ப்பினிகள், அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளை மருத்துவமனைகளுக்கு கட்டணமின்றி அழைத்துவர தனியார் ஆம்புலன்ஸ் வாகனங்கள் போதிய அளவில் அமர்த்தப்பட்டுள்ளன.

நாமக்கல் மாவட்டத்தில் கொரோனா நோய்தொற்றிலிருந்து உயிரிழப்பின்றி மக்களை காக்கும் மகத்தான சேவையிலும், மகப்பேறு / பேறுசார் சேவையிலும், அவசர சிகிச்சை பணிகளிலும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் ஒருங்கினைந்து செயல்பட மாவட்ட நிர்வாகம் மேற்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது.